**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சொல் எத்தனை வகைப்படும்?
2. தொல்காப்பியத்தின் ஆசிரியர் யார்?
3. பாயிரம் என்பது யாது?
4. உரிச்சொற்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. மருத நிலத்தின் உரிப்பொருள் யாது?
6. போலியின் வகைகள் யாது?
7. பகாப்பதம் என்றால் என்ன?
8. வினைத்தொகைக்கு ஏதேனும் ஒரு எடுத்துக்காட்டு தருக.
9. எட்டு+ஆயிரம் எவ்வாறு புணரும்?
10. 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – இவ்விதிக்கு ஒரு எடுத்துக்காட்டு தருக.
11. வினா எழுத்துக்கள் எவை?
12. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் யாவை?
13. நெடில் எழுத்துகளுக்கு மாத்திரை எத்தனை?
14. மூவிடங்கள் எவை?
15. சிறுபொழுது என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. வினைச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
2. அல்வழிப் புணர்ச்சி என்றால் என்ன?
3. யாப்பின் உறுப்புகள் யாவை?
4. "தொள்ளாயிரம்" எண்ணுக்குரிய புணர்ச்சி விதியை எழுதுக.
5. குற்றியலிகரம் என்றால் என்ன?
6. வியங்கோள் வினைமுற்று என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
7. இடைநிலை என்பது யாது?
8. உவமை அணி – சான்றுடன் விளக்குக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சார்பெழுத்துகள் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பகுபத உறுப்புகளை விளக்கி வரைக.

2. (அ) தொகாநிலைப் புணர்ச்சியைச் சான்றுடன் தருக.

(அல்லது)

(ஆ) வேற்றுமை தொகைக் குறித்து கட்டுரை வரைக.

3. (அ) வல்லினம் மிகா இடங்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ண'கர 'ன'கர ஈற்றுப் புணர்ச்சியை விவரி.

•••••••